# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண். 54/2016

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2024 ஆண்டு செப்டம்பர் மாதம் 11 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : மோகன் | மதம் | : |
| த/பெ | : ராதாகிருஷ்ணன் | ஜாதி | : |
| வயது | : | கிராமம் | : |
| தொழில் | : | வட்டம் | : |

11.09.2024

<u>**பி.வா.சா.1 திரும்ப அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**</u>

9. 06.03.2002ல் என் அப்பாவிற்கு பத்திரம் எழுதிக்கொடுத்த தேதியில் வாதி பாபு நாயுடு ஊரில் இல்லை என்றால் சரிதான். அவர் இந்திய விமானப்படையில் பணி புரிந்ததால் அந்த சமயம் வெளியூரில் இருந்தார் என்றால் சரிதான். வாதி பாபு நாயுடு 2011ல் பணி ஓய்வு பெற்றார் என்றால் சரிதான். வாதி பாபு நாயுடு பணி ஓய்வு பெற்ற பின்பு தாவா சொத்தில் விவசாயம் செய்த நிலையில் 2016ல் கிரைய விவரம் தெரிய வந்து அதன் பின்பு வில்லங்க சான்று எடுத்த பின்புதான் கிரைய விவரம் வாதிக்கு தெரியும் என்றால் இல்லை.

10. வில்லங்க சான்று எடுத்து கிரைய ஆவணங்களின் நகல் பெற்ற பின்புதான் பாப்பம்மாள், நாகராஜ், வேணுகோபால் ஆகியோர் வாதி பாபு நாயுடுவை ஏமாற்றி பத்திரம் எழுதிய விவரம் வாதிக்கு தெரிய வந்தது என்றால் பொய். அதனால்தான் 2016ல் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் பொய். நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை 2 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் ஒத்திவைக்கப்படுகிறது)